RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21418

OPEN ACCESS

# சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகள் - இனவரைவியல் பார்வை

## மு. சங்கர் [அ, *]

அ தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி-626130, தமிழ்நாடு, இந்தியா

# Sangam Literary Short Poems - Ethnographic Perspective

## M. Sankar [a, *]

[a] Department of Tamil, Sri Kaliswari College (Autonomous), Sivakasi-626130, Tamil Nadu, India

* Corresponding Author:
sankartamilskcgri@gmail.com

Received: 02-02-2021
Revised: 11-09-2021
Accepted: 13-09-2021
Published: 21-09-2021

Check for updates

## ABSTRACT

Anthropology is the science of being able to talk about man. There are various disciplines in anthropology. Cultural anthropology is one of them. There are two divisions in this cultural anthropology. One of them is ethnography; The other is Ethnology. Of these, ethnographic research appeared in the early 19th century. Ethnography is the study of all kinds of traditions found in a particular group of people or in a particular area. Those who write this will be called "ethnographers". Ethnography is the study of how a person of a particular culture views his or her culture from that perspective. Today, they are writing about the culture of their people. This is what we call "Tinaisar inavariviyal". Cultural studies also form the basis of ethnographic research. Ethnographic research is helpful in examining the culture of a particular ethnic group. That is why ethnographic research may have laid its scepter in the fields of social anthropology, cultural anthropology and folklore. In Short Ethnography is the process of penetrating the life of a particular ethnic group. In this way one can understand the Civilization and Culture. As we seek to explain a particular group and their culture, we begin to act with certain elements in mind. In that sense Bhagwatsala Bharathi exemplifies 37 elements of ethnography in his Cultural Anthropology. These elements contribute to penetrating the lives of a particular ethnic group. In this way one can understand the civilization and culture of the Peoples. Kuṟiñcittiṇai is one of the four geographical categories referred to as Tolkappiyam. There are 488 poems about in the Sangam literature. The purpose of this article is to evaluate these collections on the basis of Ethnographical Study, with a collection of Sangam literary Kuṟiñcittiṇai Poems. It explores the Material, Cultural, Occupations, Rituals, and Beliefs of the people of Kurinji.

**Keywords:** Ethnography, Sangam Literature, Kuṟiñcittiṇai Poems, Cultural, Civilization

## முன்னுரை

மனிதனைப் பற்றிப் பேசக்கூடியதும் மனிதனைப் பற்றிய அறிவியலும் மானிடவியலாகும். இம்மானிடவியலில் பல்வேறு பிரிவுகள் உண்டு. அவற்றுள் ஒன்றுதான் பண்பாட்டு மானிடவியல். இந்தப் பண்பாட்டு மானிடவியலில் இரண்டு பிரிவுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று இனவரைவியல் (Ethnography); மற்றொன்று இனவியல் (Ethnology) என்பன. இவற்றுள், இனவரைவியல் ஆய்வு 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது. ஒரு குறிப்பிட்ட மக்கள் குழு அல்லது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் காணப்படும் அனைத்து வகையான மரபுகள் பற்றி மேற்கொள்ளும் ஆய்வே

இனவரைவியல் ஆகும். இதனை எழுதுவோரை “இனவரைவியலார்” என்றழைப்பர். ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைச் சேர்ந்தவர் தம்முடைய பண்பாட்டை எப்படி பார்க்கின்றாரோ அந்தப் பார்வைத்தளத்தில் இருந்து உற்றுநோக்கிப் புரிந்து கொள்ள வேண்டிய ஆய்வாக இனவரைவியல் அமைந்துள்ளது. இன்று அந்தந்த வட்டார மக்களின் பண்பாட்டைக் குறித்து, அவர்களே எழுதும் சூழல் உருவாகியுள்ளது. இதனையே “திணைசார் இனவரைவியல்” என்றழைப்பர். பண்பாடு சார்ந்த ஆய்வுகளும் இனவரைவியல் ஆய்வுக்கு அடித்தளங்களாக அமைந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட இனக்குழுவைப் பற்றிய பண்பாட்டை ஆராய இனவரைவியல் ஆய்வு உதவிகரமாக அமைந்துள்ளது. எனவேதான், இனவரைவியல் ஆய்வு சமூக மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், நாட்டுப்புறவியல் ஆகிய துறைகளில் தமது செங்கோலைச் செலுத்தியுள்ளது எனலாம். தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் நானிலப் பகுப்புகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. அப்பகுப்புகள் தெய்வத்தை முன்னிலைப்படுத்தி அமைந்துள்ளமை கண்கூடு. அப்பகுப்புகளுள் ஒன்றான குறிஞ்சி, “சேயோன் மேய மைவரை உலகம்” எனச் சுட்டப்படுகின்றது. சங்க இலக்கிய நூல்களுள் குறிஞ்சித்திணைப் பற்றி 488 அகக்கவிதைகள் உள்ளன. இவற்றின் தொகுப்பினைச் சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகளெனக் கொண்டு, அவற்றை இனவரைவியல் அடிப்படையில் மதிப்பிடுவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கம்.

## இனவரைவியல் கூறுகள்

ஒரு குறிப்பிட்ட குழுவைப் பற்றி, அவர்களது பண்பாடு பற்றி விளக்க முற்படுகையில் சில குறிப்பிட்ட கூறுகளை மனதில் இருத்திக் கொண்டே செயல்படத் துவங்குவோம். அந்த வகையில் இனவரைவியலுக்கான 37 கூறுகளைப் பக்தவத்சல பாரதி தம் பண்பாட்டு மானிடவியலில் எடுத்துக்காட்டுகின்றார் இக்கூறுகள் ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்களின் வாழ்க்கையினை ஊடுருவிப் பார்ப்பதற்கு உறுதுணையாக அமைகின்றன. இவற்றின் வழி அம்மக்களின் நாகரீகத்தையும் பண்பாட்டையும் புரிந்து கொள்ளலாம். (Bagthavatchala Bharathi, 2009)

- பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள்
- தொழில்கள்
- சடங்குகள்
- நம்பிக்கைகள்

பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள்

பண்பாடு என்பது மனிதனின் வாழ்க்கையோடும் வாழும் முறைமையோடும் தொடர்புடையதாகும். மனித இனம் மட்டுமே பண்பாட்டு இயல்புகளைக் கொண்டிருக்கின்றது. இப்பண்பாடு நிலத்திற்கும் நிலம், நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம் மாறுபட்டதாக அமையும். பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளாகப் பக்தவத்சல பாரதி கூறுகையில், 'மக்கள் அவர்களின் பயன்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளும் அனைத்துப் பொருட்களும் பொருள்சார் கூறுகள் எனப்படும். இயந்திரங்கள், வீட்டுப் பொருட்கள், அழகுப் பொருட்கள், தொழிற்கருவிகள், கட்டடங்கள், சாலைகள், போக்குவரத்துச் சாதனங்கள் போன்றவை இதில் அடங்கும்' என்கின்றார். இவையெல்லாம் கண்ணுக்குப் புலனாகக் கூடியவை. (Bagthavatchala Bharathi, 2009).

## அணிகலன்கள்

அணிகலன்களை ஆண் மக்கள் அணிபவை என்றும் பெண் மக்கள் அணிபவை என்றும் குழந்தைகள் அணிபவை என்றும் பிரிக்கலாம். குறிஞ்சி நில மக்கள் அணிந்த அணிகலன்களுள் கழல், தொடி, குழை, வளை, புலிப்பல் தாலி, மோசை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. குறிஞ்சி நில மகளிர் ஆடையினால் தங்களது உடலை முழுமையாக மறைக்காமல் அணிகலன்கள் கொண்டு மறைத்தனர். மகளிர் பல்வேறு அணிகலன்களால் தம்மை ஒப்பனை செய்து கொண்டனர். அதில் வளை, தொடி, மோசை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தோள் வளை நெகிழ்த்த (குறுந்.252), கைவளை நெகிழ்தலும் (குறுந்.371), அகன்தொடி செறித்த முன்கை (நற்.77), ஒள்ளிழை மகளிர் இலங்கு வளைத் தொடூஉம் /

மெல்விரல் மோசை போல (நற்.188) ஆகிய அடிகளில் மகளிர் அணிந்த அணிகலன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கலித்தொகை - குறிஞ்சிக்கலி (54, 55) வழியாக மகளிர் மகரவாய், வகிர் ஆகிய தலையணிகளையும் அணிந்துள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். பெண்கள் கண்ணுக்கு மைத்தீட்டிக் கொள்வதற்குக் கோல் பயன்பட்டது. குறிஞ்சி நில ஆடவர்களின் அணிகலன்களுள் கழல் பற்றிய குறிப்பு அதிகம் காணக் கிடைக்கின்றன. இவ்வணிகலன் ஆடவர் காலில் அணியக் கூடியது. சங்க இனக்குழுச் சமுதாயம் வீரநிலையுகக் காலமாகத் திகழ்வதை இதன் மூலம் உய்த்துணரமுடிகின்றது. பாசி சூழ்ந்த பெருங்கழல் (ஐங்.206) என்று ஐங்குறுநூறில் தலைமகனின் கழல் கூறப்படுகின்றது. ஐம்படைத்தாலி, புலிப்பல் தாலி ஆகியவற்றை ஆண் குழந்தைகளுக்கு அணிவித்தனர் என்பதைப் புலிப்பல் தாலிப் புதல்வன் புல்லி (குறுந்.161) என வரும் அடியால் அறிலாம்.

## கருவிகள்

குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுவதற்கு ஏற்றாற் போலுள்ள கருவிகளைப் பயன்படுத்தினர். குறிப்பாக வாள், கவண், பகழி, வில் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தொடலை ஒள்வாள் (ஐங்.206), கவண்ஒலி வெரீஇ (குறுந்.54), குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன் (குறுந்.331), சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇ (குறுந்.385) ஆகிய அடிகள் குறிஞ்சி நில மக்கள் பயன்படுத்திய கருவிகளை எடுத்துக்காட்டுகின்றன. தினைப்பயிர்களுக்கு இடையே உள்ள களைகளைக் களைக்கொட்டியைக் கொண்டு அப்புறப்படுத்தினர் என்பதை நற்றிணை வெளிப்படுத்துகின்றது. குறிஞ்சி நில மக்கள் மேட்டு நிலத்தில் பெரிய சிவந்த தினைப்பயிர்களைச் செழித்து வளரும்படி வளர்த்தனர். அவற்றை உண்பதற்கு வரும் கிளிகளை விரட்ட தினைப்புனம் காக்கச் செல்லும் மகளிர் தட்டை, குளிர், தழல் ஆகிய இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர். இதனை, …… ……. ……. ஏனல் / படுகிளி கடியும் கொடிச்சிக்கைக் குளிரே (குறுந்.291), குளிர்படு கையள் கொடிச்சி செல்கென (நற்.306), …… …… …… தட்டையின் / ஐவனச் சிறுகிளி கடியும் நாட (ஐங்.285) ஆகிய அடிகள் வழி அறியலாம். இவை தவிர, முறி, பல்லியம், முழவு, தொண்டகச் சிறுபறை, பெருந்துடி முதலிய இசைக்கருவிகளையும் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் காணலாம். தழலும் தட்டையும் முறியும் தந்து (குறுந்.223), பல்லியம் கறங்க (குறுந்.263), முழவுமுதல் அரைய (குறுந்.301), …. …… தொண்டகச் சிறுபறை / பானாள் யாமத்தும் கறங்கும் (குறுந்.375), பெருந்துடி கறங்க (நற்.77) ஆகிய அடிகளில் குறிஞ்சித்திணைக்குரிய இசைக்கருவிகள் பதிவாகியுள்ளன.

## புழங்குபொருட்கள்

நம்மோடு தொடர்புடைய பொருட்களுள் புழங்குபொருட்கள் மிக நெருங்கிய தொடர்புடையவை. நம் உணர்வுகள் நிலைகொண்டிருக்கும் களமாகப் புழங்குபொருட்கள் திகழ்கின்றன. இதனைப் பொருள்சார் பண்பாட்டில் அடக்கலாம். இவ்வகையில் குறிஞ்சி நில மக்களின் புழங்குபொருட்களைக் காண்பது அவசியம். குறிஞ்சி நில மக்கள் கள்ளினை வட்டுச்சாடியினுள் ஊற்றி வைத்துள்ளனர். இது அரக்கினால் செய்யப்பட்டிருந்தது என்பதைச் செம்பொறி அரக்கின் வட்டுநா வடிக்கும் (நற்.341) என்னும் அடி உறுதி செய்யும். தானிய வகைகளைக் குற்றி அரிசியாக மாற்ற உரல் பயன்பட்டது. மூங்கில் நெல், வெண்ணெல் ஆகியவற்றைக் குற்றி அரிசியாக்குவதற்குக் கல்லால் செய்யப்பட்ட உரலைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை, ஆடுகழை நெல்லை அறை உரலுள் பெய்து (கலித்.41), ஐவன வெண்ணெல் அறையுரலுள் பெய்து (கலித்.43) என்னும் கலித்தொகை அடிகள் வழி அறிந்து கொள்ளலாம். இதன் அமைப்புப் பற்றி அறிந்து கொள்ள இயலவில்லை. தானிய வகைகளை உரலில் இட்டுக் குற்றுவதற்குப் பயன்படுவது உலக்கை ஆகும். இவ்வுலக்கைச் சந்தன மரத்தாலும் யானை தந்தத்தாலும் செய்யப்பெற்றுள்ளது. இதனைக் கலித்தொகை,

வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்து
ஏந்து மருப்பின் இனவண்டு இமிர்பு ஊதும்
சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால் (கலித்.43)

என்று குறிப்பிடும். சந்தன மர உலக்கையும் யானைத் தந்தத்தால் செய்யப் பெற்ற உலக்கையும் கானவர்களின் வளப்பத்தை வெளிப்படுத்துகின்றன. இந்நிகழ்வு பற்றித் தனிநாயக அடிகளார் கூறுகையில், '...... தமிழ் மக்கள் தங்கள் வீடுகளிலேயே உரல்களையும் உலக்கைகளையும் வைத்திருந்தனர். ஆனால், இயற்கை சார்ந்த உரல்களையும் விலையுயர்ந்த உலக்கைகளையும் படைப்பதன் வாயிலாக, இயற்கைக்கும் புராதன வாழ்க்கைக்கும் அணுக்கமான தொடர்பினைப் படைப்பதன் வாயிலாக, ஒரு சாதாரணக் காட்சியைக் கவிஞர் அழகுபடுத்தகிறார்' என்கின்றார். (Thaninayaga Adigalar, 2014). இவர்கள் படுப்பதற்குப் புலித்தோலைப் பயன்படுத்தினர் என்பதை, 'வரியதள் படுத்த சேக்கை' (அகம்.358) என்னும் அடி உறுதி செய்யும். வழிப்போக்கனுக்குப் பொறகிண்ணத்தில் நீர் கொடுத்த குறிஞ்சி நிலப் பெண்ணைக் கலித்தொகையில் காணலாம். இதில், 'அடர்பொற் சிரகம்' (கலித்.51) குறிப்பிடப்படுகின்றது.

.

## உணவு முறை

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு. ஒவ்வொரு நிலத்தைச் சார்ந்தோரும் அந்தந்த நிலத்தின் இயல்புக்கு ஏற்பவே உணவினை உண்டுள்ளனர். அந்த வகையில் குறிஞ்சி நில மக்களும் தங்களுக்கென்று தனித்த உணவு அடையாளங்களோடு வாழ்ந்துள்ளனர். தொடக்கநிலையில் இவர்கள் தொழில் அடிப்படையிலும் நில அடிப்படையிலும் இயற்கையில் கிடைக்கும் காய்களையும் கனிகளையும் கிழங்குகளையும் தேனையும் உணவாக உண்டுள்ளனர். கானவர்கள் உணவுக்காகக் கிழங்குகளைத் தோண்டி எடுத்தனர் என்பதைக் கானவர் கிழங்ககழ நெடுகுழி மல்க (ஐங்.208) என்னும் அடி உணர்த்துகின்றது. இம்மக்கள் கிழங்கு வகைகளுள் சேப்பங்கிழங்கை உணவாகப் பயன்படுத்தியுள்ளமையை, நீலத்தன்ன அகலிலைச் சேம்பின் / பிண்டமன்ன கொழுங் கிழங்கு (அகம்.172) என்னும் அடிகள் வழி அறியலாம்.

குறவர்கள் ஆம்பல் மலர் கொண்டு தயாரிக்கப்பட்ட அவியலை நெய்ச்சோற்றுடன் சேர்த்து உண்டனர் என்பதை, நெல்லின் விளைக்கதிர் கொண்டு / தடந்தாள் ஆம்பல் மலரொடு கூடி (அகம்.78) என்னும் அடிகள் எடுத்தியம்புகின்றன. தலைமகன் பலாவினது முழவு போன்ற பருத்த கனியின்றும் பிழிந்த மதுவினை உண்டு களித்ததாக அகம்.172 ஆம் கவிதை பதிவு செய்கின்றது.

முன்றில் நீடிய முழவுறழ் பலவின்

பிழிமகிழ் உவகையின் (அகம்.172)

இது தவிர, வாழை, பலா ஆகியவையும் கனி வகைகளுள் சிறந்த உணவாக இருந்துள்ளன. செழுமையாக வளர்ந்து வரக்கூடிய வாழையின் பெருங்குலையில் இருக்கக்கூடிய வாழைக்காய்த் தானாகவே முதிர்ந்து பழுத்து இனிமையான கனியைக் கொடுக்கின்றது. அத்தகைய கனியை அதிகம் உண்ணாத அளவுக்குத் திகட்டச் செய்யும் தன்மையுடையது. பலாவும் வாழையைப் போன்ற தன்மையுடையதாகும் என்பதைச் சங்கப்புலவர் பின்வருமாறு பதிவு செய்கின்றார்.

கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை

ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த

சாரற் பலவின் சூளையொடு (அகம்.102)

முக்கனிகளுள் ஒன்றான பலாப்பழத்தைக் குறிஞ்சிக் குறவர்கள் விரும்பி உண்டுள்ளனர் என்பதைப் 'பலவின் பழந்தூங்கு கொழுநிழ லொளிக்கும் நாடற்கு' (ஐங்.216), 'சாரல் பலவின் கொழுந்துணர் நறும்பழம்' (ஐங்.214) என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன. ஐவனம் என்பது மலை நெல்லாகும். ஐவன நெல்லைக் குற்றி அரிசியாக்கிக் குறிஞ்சி நில மக்கள் உணவாக உட்கொண்டுள்ளனர். அவர்கள் உணவுக்காக விளைவித்த ஐவன நெல்லைப் பிறர் கவரா வண்ணம் பாதுகாத்தும் வந்தனர் என்பதைத் துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி / ஐவனம் கவரும் குன்ற நாடன் (ஐங்.267) என்னும் அடிகளின் வழி உணர்ந்து கொள்ளலாம். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சியாகையால் தினை நன்றாக விளைந்தது. இதனால், தினையைக் குறிஞ்சி நில மக்கள் முக்கிய

உணவாகப் பயன்படுத்தினர். விதைக்கென நன்கு முற்றிய தினைக் கதிரைக் காய வைத்துப் பயன்படுத்தினர் என்பதையும் நிலத்தைச் சமன்படுத்தி அதில் தினையைப் பயிரிட்டனர் என்பதையும் தினைப் பயிர்களுக்கு இடையில் உள்ள களைகளைக் களைக்கொட்டினால் அப்புறப்படுத்தினர் என்பதையும் நன்கு முற்றிய தினைக் கதிர்களைக் குறவர் அறுவடை செய்தனர் என்பதையும் சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகள் தெளிவுபடுத்துகின்றன.

குறிஞ்சி நில மக்கள் மாம்பிஞ்சினைத் தங்கள் உணவில் பயன்படுத்தியுள்ளனர். இம்மா வடு இயற்கையாகவே யாரும் பறிக்காமல் மாமரத்தில் இருந்து கீழே விழுந்தது. இதனைக் குறவர் சேகரித்து வைத்திருந்தனர் என்பதை, நறுவடி மாஅத்த மூக்கிற புதிர்ந்த / வீர்ந்தண் பெருவடுப் பாலையிற் குறவர் (ஐங்.213) என்னும் அடிகள் மூலம் அறியலாம். தேன், தினை இரண்டும் குறிஞ்சி நில மக்களின் முக்கிய உணவுப் பொருட்களாகும். பெரிய தேனடையில் தேனீக்கள் மொய்த்தலால் தேன் கசிந்து கீழே உள்ள கல்லின் குழிகளில் வடியும். குறச்சிறுவர்கள் அதனை வழித்து உண்டது போக எஞ்சியுள்ள தேனைக் குரங்குக் குட்டிகள் உண்ணும் என்று நற்றிணை தெரிவிக்கின்றது. இதனை, புள்ளூறுத்துக் கசிந்த தீம்தேன் கல்லளைக் / குறக்குறு மாக்கள் உண்ட மிச்சிலைப் / புன்தலை மந்தி வன்பறழ் நக்கும் (நற்.168) என்னும் அடிகள் இயம்புகின்றன. கானவர்கள் வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சியை உண்டுள்ளனர். இறைச்சியைப் பகுத்துண்டனர் என்பதை நற்றிணைத் தெரிவிக்கின்றது. தினைக்கதிரை உண்ட ஆண் பன்றியைக் கொன்று கானவன் தன் மனைவியிடம் தர, அவள் அப்பன்றியை அறுத்துத் தன் குடியினர் யாவருக்கும் முறையுடன் பகிர்ந்தளித்தாள் என்பதை,

கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்

பச்சூன் பெய்த பகழி போல (நற்.75)

..... ...... ...... கானவன்

வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை

புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டி

குடிமுறை பகுக்கும் (நற்.336) என்ற அடிகளால் அறியலாம்.

கானவன் அம்பெய்திக் கொன்ற முள்ளம்பன்றியின் கொழுத்த தசைப் பகுதியைக் கிழங்கொடு சேர்த்து சிறுகுடியினர் யாவர்க்கும் பகுத்துத் தருகின்றாள் கானவன் மனைவி.

கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை

தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு

காந்தளம் சிறுகுடிப் பகுக்கும் (நற்.85)

உணவினைப் பகுத்துண்ணும் இம்முறை கானவர்களின் இனக்குழு வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கின்றது. உழுந்து பயிறு வகைகளில் ஒன்று. கரிய நிறமுடைய இப்பயிற்றைத் தோல் நீக்கிப் பயன்படுத்துகின்றோம். குறிஞ்சி நில மக்கள் உழுந்தினை மாவாக மாற்றி, அதனோடு நெய் சேர்த்து, நன்கு பிசைந்து கொடி போல் கையில் திரித்து வெயிலில் உலர்த்தினர். இதனை, நெய்யொடு மயக்கிய உழுந்து நூற்றன்ன (ஐங்.211) என்னும் அடி உறுதி செய்யும்.

## தழையாடை

விலங்குகளிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுவது ஆடையே. ஆதி மனிதன் தொடக்கத்தில் விலங்குகளின் தோல்களை விடவும் இலை, தழைகளையே பயன்படுத்தினான். சங்கத் தமிழர்களின் உடைகளுள் சிறப்புப் பொருந்தியதாகக் கருதப்படுவது தழையுடையே ஆகும். சங்க கால மக்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை நடத்தினர் என்பதற்குத் தழையுடையே சான்று. தழை என்னும் சொல் சங்க இலக்கியத்தில் 54 இடங்களில் பயின்று வந்துள்ளன. தழையணி என்னும் சொல் 7 இடங்களிலும் தழையுடை என்னும் சொல் ஓரிடத்திலும் பயின்று வந்துள்ளன. தழையுடை,

பகைத்தழை, கொய்தழை, விரும்பிய ஒண்தழை, வண்ண ஒண்தழை, தண்தழை முதலான சொற்கள் சங்கக் கவிதைகளில் பயின்று வந்துள்ளன. சங்க இலக்கியத்தில் பயின்று வரும் திணைமரபு நிலங்களுக்கேற்ற தழையாடைகளைக் குறிப்பிடுகின்றது. அதாவது, அந்தந்த நிலங்களில் வாழ்ந்த மக்கள், அங்கிருந்த தழைகளையே அணிந்தனர் எனலாம். இத்தழையாடையை முதுமகளிர் அணிந்திருந்தனர் என்பதற்குச் சான்று சங்கக் கவிதைகளில் இல்லை. ஆனால், இளமகளிர் தங்கள் அல்குலை மறைப்பதற்காகத் தழையாடையைப் பயன்படுத்தியுள்ளனர். சங்க காலத்தில் தலைமகன் தலைமகளுக்குக் கையுறைக் கொடுக்கும் வழக்கம் இருந்தது. அதில் தழையாடை மிக முக்கியமான ஒன்றாகும். இது களவிற்குக் குறியீடாகவும் பயன்பட்டுள்ளது. ...... ....... ...... குன்ற நாடன் / உடுக்கும் தழை தந்தனனே அதையாம் / உடுப்பின் யாய் அஞ்சுதுமே (நற்.359) என்னும் குறிஞ்சித்திணைக் கவிதையில் கபிலர் தலைமகன் தழையாடை கொடுக்க, தலைமகள் அதனைத் தாய்க்குத் தெரியாமல் மறைத்து வைக்கும் நிலைமையைப் பதிவு செய்கின்றார். ஆடவர் இடுப்பில் கட்டும் கச்சை என்னும் ஆடையை அணிந்திருந்தனர் என்பதை ஐங்குறுநூறு, பாசி சூழ்ந்த பெருங்கழல் / தண்பனி வைகிய வரிக்கச் சினனே (ஐங்.206) என்று குறிப்பிடுகின்றது. கானக்குறவர்கள் கற்றாழை நாரால் ஆடை நெய்து உடுத்தியிருந்தனர் என்பதை, மரல்நார் உடுக்கை மலையுறை குறவர் (நற்.64) என்னும் நற்றிணை அடியின் மூலம் அறியலாம்.

## இருப்பிடம்

மனிதனின் இன்றியமையாத தேவைகளுள் இருப்பிடமும் ஒன்று. மலையில் வாழும் குறவர்கள் தங்களுக்கென்று ஓர் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டனர். அது 'சிறுகுடி' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. மலையின் அடிவாரத்தில் வாழ்ந்த மக்களுள் சிலருடைய வீடுகள் மிக அழகாக வண்ணம் தீட்டிய ஓவியம் போலக் காட்சியளித்தன. இதனை, ஓவுக் கண்டன்ன இல்வரை இழைத்த (நற்.268), ஓவத்தன்ன வினைபுனை நல் இல் (அகம்.98) என்ற அடிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். குறிஞ்சி நிலக் குறவர்கள் தினைத்தாளால் வேயப்பட்ட சிறுகுடில்களில் வாழ்ந்தனர் என்பதை, இருவி வேய்ந்த குறுங்கால் குரம்மை (குறி.154) என்ற அடியில் மூலம் அறியலாம். குறிஞ்சி நில ஊர்களைச் சீறூர், சிறுகுடி, பாக்கம் என்னும் பெயர்களில் அழைத்தனர். காந்தளம் சிறுகுடிப் பகுக்கும் (நற்.85), சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள் (குறுந்.95), நறவுமலி பாக்கத்துக் குறமக ளீன்ற (குறுந்.394). கானக்குறவர்களின் வீடுகள் புல்லால் வேயப்பட்டிருந்தன. இவ்வீடுகள் அருவி விழும் மலைச்சாரலின் அருகில் இருந்தன. குடில்களுக்கு முற்றங்கள் இருந்தன. அம்முற்றங்களில் நெல்லி, பலா, வேங்கை மரங்கள் இருந்தன என்பதைச் சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகள் வழி அறிந்து கொள்ளலாம்

## தொழில்கள்

மனித வாழ்வைச் சிறக்கச் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும். சங்க காலப் பொருளாதாரம் மிகவும் தன்னிறைவு பெற்ற பொருளாதாரமாகக் காணப்பெறுகின்றது. நிலத்தின் தன்மைக்கேற்பத் தொழில்முறை நுணுக்கங்களையும் உடலுழைப்பையும் புராதன தமிழர்கள் அறிந்துச் செயல்படுத்தினர். சங்க காலச் சமூக அமைப்பில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் பிரிவினர் சமூகத்தில் மேல்மட்டத்தில் இருந்தனர். இவர்களைத் தவிர, பல்வேறு தொழில் செய்யும் பிரிவினரும் இருந்துள்ளனர். குறவர், ஆயர், உழவர், பரதவர், எயினர் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் நிலத்தின் தன்மைகளுக்கேற்பத் தம் கடமைகளைச் செய்துள்ளனர். தச்சர், கொல்லர், குயவர், உமணர், பாணன், பறையன், துடியன், கடம்பன், கணியன் ஆகியோர் சமூகத்தின் நல்வாழ்விற்கு உதவும் தொழிற்பிரிவினர் ஆவர். இவர்களுள் கானக்குறவர்கள் கிழங்கு அகழ்தல், தேன் எடுத்தல், பலா மரங்களை வளர்த்தல், வேட்டையாடுதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டனர் எனலாம். குறிஞ்சி நில மக்களின் தொழில் சார்ந்த வாழ்வியலை ஐந்து நிலைகளாகப் பிரிக்கலாம். அவை:-

தேன் சேகரித்தல்

கிழங்கு அகழ்தல்

தினை, ஐவனம் விளைவித்தலும் அவற்றைப் பாதுகாத்தலும்

இயற்கையாகக் கிடைக்கும் உணவுப் பொருட்களைச் சேகரித்தல்

இவையெல்லாம் கலப்பையின்றி வேளாண்மைச் செய்யப்பெற்றமையை எடுத்துக்காட்டுகின்றன.

வேட்டையாடுதல் - இது இனக்குழு வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றது. அதாவது ஆதி மனிதனின் வேட்டைச் சமூக வாழ்க்கையைக் குறிப்பிடலாம்.

## தேனெடுத்தல்

தேனடைகள் நிறைந்திருக்கும் உயர்ந்த மலைப்பகுதியைப் பற்றி நற்றிணை, 'தேன் தூங்கு உயர்வரை' (நற்.396) என்று குறிப்பிடுகின்றது. இம்மலையின் உச்சிப் பாறையின்கண் உள்ள இனிய தேனைக் குறவர்கள் (குறவர்களும் ஏற முடியாத பாறை) எடுக்க முயல்கின்றனர். இதனை, அறையுறு தீம்தேன் குறவர் அறுப்ப (அகம்.322) என்னும் அடி உறுதி செய்யும். தேன் என்பதற்குப் பிரசம் என்ற பதமும் பயன்படுத்தப்பெறுகின்றது என்பதைப், பிரசம் தூங்கு மலைக்கிழ வோர்க்கே (குறுந்.392) என்னும் அடியின் வழி அறியலாம். குறவர்களின் இளமக்கள் தேனடையில் தேனீக்கள் மொய்த்தலால் தேன் கசிந்து அங்குள்ள பாறையின் குழிகளில் வடிய, அதனை வழித்துண்ட நிகழ்வை நற்றிணையில் (168) காணலாம்

## கிழங்கு அகழ்தல்

கானக் குறவர்களின் கிழங்குக் குழி பற்றி, ..... ...... ..... குன்றத்துப் / பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு / கண்அகன் தூமணி பெறூஉம் நாடன் (குறுந்.379) என்னும் அடிகளில் காணலாம்

## தினை விளைவித்தலும் பாதுகாத்தலும்

கானவர் தாம் உழுது வருத்தாமல் பன்றிகள் உழுத புழுதியில் தினையை விளைவித்தனர் என்பதை ஐங்குறுநூறு, கிழங்கு அகழ் கேழல் உழுத சிலம்பில் / தலைவிளை கானவர் கொய்தனர் (ஐங்.270) என்று தெரிவிக்கின்றது. குறவர்கள் கூரிய கற்களைக் கொண்டு நிலத்தை உழுதனர் என்பதை, 'கல்லுழு குறவர்' (நற்.358) என்ற தொடர் உறுதிசெய்கின்றது. இவர்கள் மாடுகளையோ பிற விலங்குகளையோ உழுவதற்குப் பயன்படுத்தினர் என்பதற்கான குறிப்புகள் சங்க இலக்கியத்தில் இல்லை. ஆனால், மரங்களை எரித்து அவ்விடத்தில் தினைப்புனம் அமைத்தமையைக் குறுந்தொகை (198) வழி அறியலாம். குறவர் மக்கள் தினை விளைவிக்க நிலத்தை நன்கு உழுதனர் என்னும் கருத்துப்புலப்பட நற்றிணை கூறுகையில், இருங்கல் அடுக்கத்து என்னையர் உழுத / கருங்கால் செந்தினை கடியு முண்டன (நற்.122) என்கின்றது. அதுமட்டுமின்றி, இதனை மேலும் வலியுறுத்த 'கான்உழு குறவர்' (நற்.209), 'அகில்சுடு கானவர்' (நற்.282) என்னும் தொடர்களைச் சான்று காட்டலாம். இவை மட்டுமின்றி, குறவர்கள் பயிர்கள் நெருங்கி வளர, அங்குள்ள களைகளை வெட்டி அழித்தனர் (நற்.5) என்னும் செய்தியும் கிடைக்கின்றது. தினை விளைவித்துப் பயிர் நன்றாக வளர்ந்த நிலையில் பறவைகளால் அவற்றிற்குச் சேதம் ஏற்படாமல் இருக்கத் தினைப்புனத்தை மகளிர் காவல் காத்தனர். இதனை,

சாரற் புறத்த பெருங்குரற் சிறுதினைப்

பேரமர் மழைக்கண் கொடிச்சி கடியவும்

சோலை சிறுகிளி உன்னும் நாட (ஐங்.282) என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன. குறமகளைப் பெற்றோரே தினைப்புனக் காவலுக்கு அனுப்பியுள்ளனர். அதுவும் பகலில் சென்றுள்ளனர். இரவில் தினைப்புனக் காவலுக்கு ஆடவர் சென்றுள்ளனர். இது மானிடவியலார் குறிப்பிடும் வேலைப் பகிர்வை (Division of Labour) ஒத்துள்ளது. 'வேலைப் பகிர்வு என்னும் ஓர் அடிப்படையான பண்பின் வழி மக்கள் குழுவினர் தங்களை ஒழுங்கமைத்துக் கொள்கின்றனர். இந்நிலையில் வரலாற்று ரீதியாக மனித

சமூகங்கள் வேலைப் பகிர்வு முறையில் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்கள் அடிப்படையில் பகுக்கப்படுகின்றன. தொழில்நுட்ப ரீதியாக மிக எளிமையான சமூகங்களில் கூட அன்றாட வேலைகளை வயது, பாலின அடிப்படையில் மக்கள் பகிர்ந்து கொள்கின்றனர்' என்கின்றனர் சமூகப் பண்பாட்டு மானிடவியலார் (John Monagan - Beter Jast, 2005) யானை முதலிய விலங்குகளால் தினைப்புனம் அழிவு நேரும் சூழலில் கணையர், கிணையர், கவணர், விளியர் ஆகியோர் ஆரவாரித்து எச்சரிக்கை செய்துள்ளனர். இதனை, மலைஅயல் கலித்த மைஆர் ஏனல் / துணையின் தீர்ந்த கடுங்கண் யானை / அணையக் கண்ட அம்குடிக் குறவர் / கணையர் கிணையர் கைபுனை கவணர் / விளியர் புறக்குடி ஆர்க்கும் (நற்.108) என்னும் நற்றிணை அடிகளில் காணலாம். இம்மகளிர் பரணின் மேலிருந்து தினையை உண்ண வரும் பறவைகளைத் தழல், தட்டை, குளிர் ஆகிய கருவிகளை இசைத்து விரட்டினர் என்பதை, ...... ...... ...... தட்டையின் / ஐவனச் சிறுகிளி கடியும் நாட (ஐங்.285) என்னும் அடிகள் உறுதி செய்யும். குறிஞ்சிச் சமூகத்தில் பெண்கள் உழைப்பில் ஈடுபட்டு இருந்தமையைப் 'புனங்காத்தல்' தொழில் உணர்த்துகின்றது.

தினைக்கதிர்களை உண்ண வரும் பன்றியை விரட்ட பரண் மீது ஒளியேற்றி வைத்துப் புனம் காக்கும் முறையினை அகம்.88 கூறுகின்றது. ஒளியைக் கண்டால் பன்றி வராமல் திரும்பி விடும் என்பதால் விளக்கேற்றி வைத்திருக்கக் கூடும். தினைக்கதிர் நன்றாக முற்றியதும் தினை அறுவடை செய்வர். அவரைப் பூக்கும் காலத்தில் குறவர் தினையை அரிந்தனர் என்னும் செய்தியை, பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால் / கொழுங்கொடி அவரைப் பூக்கும் (குறுந்.82) என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன. அதுவும் இரவுப்பொழுதில் தொண்டகச் சிறுபறையை முழுங்கி தினைக்கதிர்களை அரிந்தனர் என்பதைக் குறுந்தொகையின் (குறுந்.375) வழி அறியலாம். குறவர்களால் அரியப்பட்ட தினை, காய வைக்கப்பட்டன. அதனை மகளிர் கைகளால் துழாவியுள்ளனர் என்பதை நற்றிணையில் காணலாம்.

..... ..... ..... மகளிர்

உணங்கு தினை துழவும் கைபோல (நற்.)

செந்தினை உணங்கல் தொகுக்கும் (நற்.344)

கானவர்களால் கொயப்பட்ட தினையைக் கதிரடிக்க போராகக் குவிக்கப்பட்ட நிலைமையை, மென்தினை நெடும்போர் புரிமார் என்று நற்றிணை (125) குறிப்பிடுகின்றது. குறிஞ்சி நில மக்கள் கொல்லையில் உள்ள தூறுகளை அகற்றி தீயிட்டு அழித்து தினையை விளைவித்தனர் என்பதனை, மலையிடம் படுத்துக் கோட்டிய கொல்லைத் / தளிபதம் பெற்ற கான்உழு குறவர் / சிலவித்து அகல இட்டென பலவிளைந்து / இறங்குகுரல் பிறங்கிய ஏனல் உள்ளாள் (நற்.209) என்ற நற்றிணை அடிகள் வழி அறியலாம். இதிலிருந்து பண்டைய காலத்தில் தினையைப் பயிரிடலும் பாதுகாத்தலும் குறவர்களுக்கும் கானவர்களுக்கும் குறமகளுக்கும் உரிய தொழில்களாக இருந்துள்ளன என்பதைச் சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகள் வழி உணரலாம்

## வேட்டையாடுதல்

சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் கானக்குறவர், குன்றக் குறவர், ஏனல் காவலர், நாடன், பல்கிளைக் குறவர், மலையுறை குறவர், புனவன் என்று பல பெயர்களால் குறவர்கள் அழைக்கப்படுகின்றனர். இம்மக்களிடம் வேட்டையாடுவதற்கென்று வில், அம்பு, நாய், வலை, பொறி ஆகியவை இருந்தள்ளன. நற்றிணை 276 ஆம் பாடல் கானக்குறவரையும் வேடுவரையும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. நற்றிணை 285 ஆம் பாடல் கானக்குறவனை வேடனாகச் சித்தரிக்கின்றது. தினை வேளாண்மையில் சிறப்புற்றிருந்த குறிஞ்சி நில மக்கள் வேட்டைத் தொழிலும் சிறந்து விளங்கினர். இவர்களின் உபரி பொருட்கள் அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. அதாவது, வேட்டையில் கிடைத்த பொருட்களைக் கொடிச்சியர் தம் குழுவினருக்குப் பங்கிட்டுக் கொடுத்ததை நற்றிணையில் காணலாம். குறவர்களின் வேட்டைத் தொழில் பற்றிய சான்றுகளை நற்றிணை வழி அறியலாம்.

கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சி

பச்சூன் பெய்த பகழி போல (நற்.75)

சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்

சேறுஆடு இரும்புறம் நீறாடு சிவண

வெள்வசிப் படீஇயர் மொய்த்த வள்புஅழீஇ

கோள்நாய் கொண்ட கொள்ளைக்

கானவர் பெயர்க்கும் சிறுகுடி (நற்.82)

தினையுண் கேழல் இரிய புனவன்

சிறுபொறி மாட்டிய பெருங்கல் படாஅர் (நற்.119)

ஆகிய அடிகள் கானவரின் வேட்டைத் தொழிலைப் பறைச் சாற்றுகின்றன. இக்கானவர்கள் விலங்குகளைப் பிடிக்க பொறி வைத்திருந்த செய்தியினையும் அப்பொறியில் பட்ட விலங்குகளைத் தம் குடியுடன் சேர்ந்து உண்டனர் என்னும் செய்தியையும் அறிகின்றோம். யானைக் கொம்புகளைப் பெறும் பொருட்டு யானைகளைக் கொன்று அவற்றின் தந்தங்களைக் குடிசையின் முற்றத்தில் ஊன்றிப் புலர வைத்த நிகழ்வை அகநானூறு (அகம்.172) பதிவு செய்கின்றது. நற்றிணையில், சிறுகுடியில் வாழும் குறவர்கள் இடி தாக்கி இறந்த களிற்று யானையின் தந்தங்களைப் பெரிய பாறையில் காய வைத்தனர் என்பதையும் கால் நகங்களை ஊனின்று பிரித்துப் புதைத்தனர் என்பதையும் காணலாம். இதனைப் பின்வரும் நற்றிணை அடிகள் எடுத்துக்காட்டும்.

வெண்கோடு கொண்டு வியல்அறை வைப்பவும்

பச்சூன் கெண்டி வள்ளுகிர் முணக்கவும்

மறுகுதொறு புலாவும் சிறுகுடி (நற்.114)

பன்றி வேட்டை, முள்ளம் பன்றி வேட்டை, எலி வேட்டை, யானை வேட்டை உள்ளிட்ட வேட்டைகளிலும் கானக் குறவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்பதைச் சங்கக் கவிதைகள் தெளிவுபடுத்துகின்றன. இதிலிருந்து, சங்கத் தமிழர்கள் தங்களுடைய அடிப்படைத் தேவையாகிய உணவைச் சேகரிக்கும் பொருட்டே அதிக நேரத்தைச் செலவிட்டுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. உணவு சேகரித்தலும் வேட்டையாடலுமே முக்கியத் தொழில்களாக அமைந்தன எனலாம்.

## விவசாய முறை

குறிஞ்சி நில மக்களின் விவசாய முறை பற்றி ராஜ் கௌதமன் விவரிக்கையில், 'மலைச்சாரலில் இடப்பெயர்ச்சி விவசாய முறையை அழித்து எரிக்கும் உத்தியின் மூலம் மேற்கொண்டார்கள். கானக்குறவர்கள் வாழ்ந்த சிறுகுடிப் பாக்கமாக, சாரலில் குறவர் குடும்பங்கள் மரம், புதர், செடி, கொடி முதலியவற்றிற்கு நெருப்பூட்டி எரித்துச் சாம்பலாக்கிப் புனங்களை ஏற்படுத்தினார்கள். மழை பெய்த பின் தினை அல்லது ஐவனம் என்ற காட்டு நெல் வகையை விதைத்து வளர்த்து அறுவடை செய்தார்கள். தொடர்ச்சியாக அப்புனங்களில் பயிரிடவில்லை. புதிய புதிய புனங்களை ஆங்காங்கே உண்டாக்கிப் பயிரிட்டார்கள்' என்கின்றார் (Raj Gowthaman, 2006) ஆக, குறிஞ்சி நில மக்களின் வேளாண்மை முறை என்பது எரியூட்டு வேளாண்மை முறையாகும். குறிஞ்சி நில மக்கள் நீரைத் தேக்கி வைத்துப் பாசனம் செய்துள்ளனர் என்பதை, மாரிக் குளத்து காப்பான் அன்ன (ஐங்.206) என்ற அடியின் மூலம் அறியலாம்.

சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகள் வழி இத்திணையின் பொருளாதார நிலைமை என்பது மலையின் இயற்கை வளத்தையும் புன்செய் வேளாண்மையையும் அடிப்படையாகக் கொண்டது எனலாம். பொருளாதாரத்தில் பின்னடைவு பெற்ற சமுதாயமாகவே குறிஞ்சி இருந்துள்ளது என்கின்றார் (Mathaiyan, 2010). சங்கக் குறிஞ்சித்திணையில் தினை விளைவித்தலும் தினைப்புனக் காவலும் இருந்துள்ளன. தினை விதைப்பது ஆடவருக்கு உரிய செயலாக இருந்துள்ளது. ஆனால், அதைக் காப்பது

பெரும்பான்மையும் பெண்களுக்குரிய செயலாகவே இருந்துள்ளது. இது பற்றிப் பெ.மாதையன் கருத்து வருமாறு:-

'தினை விளைச்சல் பற்றிப் பேசப்படும் எண்பது இடங்களில் ஆண்கள் தினைப்புனம் காத்த செயற்பாடு ஆறு இடங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. தினையின் மறுபெயரான ஏனல் பேசப்பட்டுள்ள நாற்பத்து மூன்று இடங்களில் எட்டு இடங்கள் மட்டுமே ஆண்களின் தினைப்புனக் காவல் சுட்டப்பட்டுள்ளது. இரண்டிலுமாகச் சேர்த்து மொத்தம் 55 இடங்களில் இளம்பெண்டிர்தம் தினைக் காவல் குறிப்பிடப்பட்டுள்ளது' என்கின்றார். (Mathaiyan, 2010). இதிலிருந்து குறிஞ்சி நிலச் சமுதாயம் இளம்பெண்களைத் தினைப்புனக் காவலுக்கு அனுப்பியுள்ளது என்பதை உணரமுடிகின்றது.

சமூகத்தில் மனிதனுக்கு மதிப்பையும் வருவாயையும் தேடித் தருவது தொழிலாகும். அந்த வகையில் கானக்குறவர்களின் தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் ஆகிய தொழில்களை விட தினை விளைவித்தல், அதனைப் பாதுகாத்தல், வேட்டையாடுதல் ஆகியவை மிகுதியாகப் பேசப்படுகின்றன. இது அவர்கள் உணவுக்காக அலைந்து திரிவதை விடுத்து ஓரிடத்தில் நிலையாக வாழ முற்பட்டதைக் காட்டுகின்றது. குறிஞ்சித்திணையில் தினை வேளாண்மை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. தினைக் காத்தல் செயல்பாட்டில் பெண்களும் ஈடுபட்டிருந்தனர். குறிஞ்சியின் மலை, மலை சார்ந்த இடங்கள் மலைவளத்தையும் புன்செய் வேளாண்மையையும் வேட்டைத் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளமையை அறிந்து கொள்ளலாம். சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகள் மூலம் குறவர்களின் புன்செய் வேளாண்மை முறையையும் எரியூட்டு வேளாண்மை முறையையும் அறிந்து கொள்ளலாம்

## சடங்குகள்

மனித இனம் தோன்றிய போதே சடங்குகள் தோன்றிவிட்டன என்றே கூறவேண்டும். இவையே மனிதனை இயக்குகின்றன. இவை மனிதனால் உருவாக்கப்பட்டுச் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. இவை மரபு வழியாகக் காலம் காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. சடங்குகள் பற்றிய புரிதலுக்குப் பல மானிடவியல் கோட்பாடுகள் வரையறை செய்கின்றன. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எமிலி துர்க்ஹைம் இது பற்றிக் கூறும்போது, மனிதர்கள் தங்களின் சமூக வாழ்வைப் பற்றிய புரிதலில் சடங்கு போன்றதொரு அடிப்படையான/ எளிய வடிவங்களையோ, கருத்துக்களையோ கண்டுபிடிப்பார்கள் என்றார். இவ்வகையான கண்டுபிடிப்புகள் சமூகத்தின் ஒட்டுமொத்த ஓர்மையுடன் காணப்படுவதால் இதனை துர்க்ஹைம் 'கூட்டுநனவிலி மனம்' என்றார் (பக்தவத்சல பாரதி, 2005:274). (Bagthavatchala Bharathi, 2005). இவர் சடங்குகளின் அமைப்பியல்புகளை முன்வைத்து இருவகைகளாகப் பகுத்தார். அவை:- 1. ஆக்கநிலைச் சடங்குகள் 2. எதிர்நிலைச் சடங்குகள் (பக்தவத்சல பாரதி, 2005:275) என்பனவாகும். (Bagthavatchala Bharathi, 2005). ஆக்கநிலைச் சடங்குகள் இயல்புத் தளத்தைப் புனிதத்தோடு இணைக்க முயல்கின்றன. ஆனால், எதிர்நிலைச் சடங்குகள் விலக்குகளை மையமிட்டதாக அமையும். ஹோவல்டாய் சடங்குகளைச் செயல்பாட்டின் அடிப்படையில் பின்வருமாறு நான்கு நிலைகளில் வகைப்படுத்துகின்றார்.

1. உணர்வு சார்ந்தது.
2. நிகழ்த்துதல் சார்ந்தது.
3. சமய நடனங்கள் - ஆட்டங்கள் சார்ந்தது.
4. சமயப் பேரணி சார்ந்த அங்கப் பிரதட்சணம் சார்ந்தது (Bagthavatchala Bharathi, 2005)

அந்தோணி வாலஸ் என்ற அமெரிக்க மானிடவியலார் சடங்குகள் பற்றிக் கூறுகையில், 'ஒரு சமூகத்தின் முக்கியச் சடங்குகள், சமூகப் பண்பாட்டுப் படிமலர்ச்சியின் போக்கைக் காட்டுவதாக இருக்கும் என்றார்' (Bagthavatchala Bharathi, 2005). இச்சடங்குகளைப் பொதுவாக, மங்களச் சடங்குகள் என்றும் மங்களமற்ற சடங்குகள் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம்.

## மழைச் சடங்கு

குறிஞ்சி நிலத்துக் கானவர்கள் மழைக்காகச் செய்த சடங்கினைப் பற்றிக் குறிஞ்சித்திணைக் கவிதையில் காணலாம். குன்றக் குறவன் ஆரவாரம் செய்ததால் மழை பெய்கின்றது. இதனை மழை வேண்டிச் செய்யப்பட்ட மந்திரச் சடங்காகக் கொள்ள வேண்டும். குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி / நுன்பல் அழிதுளி பொழியும் நாட (ஐங்.251). இது பற்றிக் கா.சுப்பிரமணியன் கூறுகையில், 'மனிதனது செயல் இயற்கையின் செயலைத் தூண்டும் என்ற மந்திரவாத நம்பிக்கையை இது உறுதிப்படுத்துகின்றது' என்கின்றார். (Sivasubramaniyan, 2011).

## வளச்சடங்கு

அகத்திணையில் இடம்பெறும் வெறியாட்டுக் காதலை மையமிட்டதாக உள்ளது. தலைமகளின் களவொழுக்கத்தால் உடல் வேறுபாட்டைக் கண்ட தாய், அதனைக் காதல் என்று அறியாமல் இது முருகணங்கால் ஏற்பட்டது என்று கருதி, வேலனை அழைத்து வெறியாட்டு என்னும் சடங்கினை நிகழ்த்துவாள். இது குறித்து அ.பாண்டுரங்கன் கூறுகையில், 'மானிடவியல் அறிஞர்கள் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களை வாழ்க்கைச் சடங்குகள் என்பர். ஒரு பெண் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ந்து, திருமணத்திற்குரிய பருவத்தை அடையும் பூப்பு நிகழ்ச்சியைத் தொடர்ந்து அவள் இளைஞன் ஒருவன் மேல் காதலுறுகின்றாள். மகளின் மனமாற்றத்தை அறியாத பெற்றோர் அவள் முருகனால் தீண்டப்பெற்றாள் என்று தவறாகக் கருதி பரிகாரம் செய்ய முற்படுகின்றனர். அந்நிலையில் வேலனை அழைத்து வந்து வெறியாடல் சடங்கை நிகழ்த்துகின்றனர். வெறியாடலின் விளைவாகத் தோழியோ, தலைவியோ தலைவியின் காதலை வெளிப்படுத்துகின்றனர். இதன்மூலம் தலைவியின் வாழ்வு அடுத்த கட்டத்திற்கு நகர்த்தப்படுகின்றது. எனவே, வெறியாடலை நாம் ஒரு வாழ்க்கை வட்டச்சடங்கு என்கின்றோம்' என்கின்றார். (Pandurangan, 2016). இவர் கூற்றிலிருந்து வெறியாட்டுச் சடங்கினை வாழ்க்கை வட்டச் சடங்காகக் கருதலாம் என்பதை அறியமுடிகின்றது. இச்சடங்கில் வேலனை அழைத்தல், களம் அமைத்தல், பொரி தூவுதல், மறியின் கழுத்தை அறுத்தல், பலி கொடுத்தல் ஆகியவை இடம்பெறும். இதனைக் குறுந்தொகையில் காணலாம்.

மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்

சொல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்க

தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா

வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்தி

பேஎய்க் கொளீஇய ளிவளெனப் படுதல்

நோதக் கன்றே தோழி (குறுந்.263)

இச்சடங்கில் தலைமகளுக்குக் கன்னம் என்னும் மந்திரத் தகடு உள்ளே வைத்துக் கட்டிய தாயத்து வழங்கப்பெறுகின்றது. இதனை ஐங்குறுநூறு,

பொய்யா மரபின் ஊர்முது வேலன்

கழங்குமெய்ப் படுத்து கன்னம் தூக்கி

முருகென மொழியு மாயின்

கெழுதகை கொல்இவள் அணங்கி யோற்கே (ஐங்.245) என்று கூறுகின்றது.

சங்க இலக்கியத்தில் காணலாகும் வெறியாட்டுத் தொடர்பான கவிதைகளைச் சடங்கியல் ரீதியாக ஆராய்ந்த ஆ.தனஞ்செயன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் (Dhananjayan, 2014)

பண்டைய தமிழகத்தில் நிலவிய வெறியாட்டு சடங்கியலோடு தொடர்புடையதாக அமைந்தது.

இச்சடங்கியலை நடத்துபவனாக வேலன் இருக்கின்றான்.

வெறியாட்டின் நோக்கம் பருவமடைந்த பெண்ணின் உடலைப் பற்றி இருக்கும் நோயைப் போக்குவதாகும்.

இச்சடங்கு அகவெளி சார்ந்ததாகவும் பொதுவெளி நிகழ்வாகவும் அமையும்.

களமிழைத்தல்.

வேலனுக்குரிய உடைமைகள்.

முருகனை வணங்கி ஆவி வயப்படுத்துதல்.

உயிர்ப்பலியிடல்.

## திருமணச் சடங்கு

மனிதனின் அச்ச உணர்வின் காரணமாக நம்பிக்கைகள் தோன்றின. இவை மனித வாழ்வை இயக்குகின்றன. நம்பிக்கைகள் பற்றிச் சு.சக்திவேல் குறிப்பிடுகையில், 'நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலங்காலமாகத் தொடர்ந்து வரக்காண்கின்றோம்' என்கின்றார். (Sakthivel, 2010) மக்களிடையே நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும் நிறைந்துள்ளன. இவற்றுள் நம்பிக்கை என்பது காரண - காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவக் கூடியதைக் குறிக்கும். மூடநம்பிக்கை என்பது காரண - காரியத் தொடர்பின் மூலமாகவோ சான்றுகளின் மூலமாகவோ விளக்க முடியாதவற்றைக் குறிக்கும். வழக்கிலும் இலக்கியத்திலும் இடம்பெறும் நம்பிக்கைகளின் நிலை பற்றிக் க.காந்தி கூறுகையில், 'நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்படுவன. அவை வழக்கில் மிகுதியாயும் இலக்கியங்களில் குறைந்தும் காணப்படும். எனவே, இலக்கியங்கள் சுட்டும் நம்பிக்கைகள் அச்சமுதாயத்தின் நம்பிக்கைகள் அனைத்தையும் கூறும் என்று சொல்ல இயலாது. இலக்கியங்களில் இடம்பெறும் நம்பிக்கைகள் பெரும்பாலும் அன்றைய மக்களிடையே சமுதாயச் செல்வாக்குப் பெற்ற குறிப்பிடத்தக்க நம்பிக்கைகளாக அமையும். ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தின் அறிவுத்திறனை அளவிட இயலும்' என்கின்றார். இனிக் குறிஞ்சித்திணையில் காணலாகும் நம்பிக்கைகள் பற்றிக் காண்போம். (Gandhi, 2003)

## கண் துடித்தல் பற்றிய நம்பிக்கை

தலைமகனை எதிர் நோக்கிக் காத்திருக்கும் தலைமகளுக்குக் கண் துடித்தல் தலைமகன் விரைவில் வந்துவிடுவான் என்பதை உணர்த்துகின்றது. இதனை ஐங்குறுநூறில், நுண்ணேர் புருவத்த கண்ணும் ஆடும் / மயிர்வார் முன்கை வளையும் செறூஉம் (ஐங்.218) என்றவாறு வரக் காணலாம்.

படையல் செய்து வழிபட்டால் நோய் நீங்கும் என்ற நம்பிக்கை

நோய் நீக்க வேண்டி முருகனுக்கு ஆட்டினை அறுத்துப் பலியிட்டு வழிபடும் நம்பிக்கையைக் குறிஞ்சித்திணையில் காணலாம். இதனை, அணங்கறி கழங்கின் கோட்டம் காட்டி / வெறியென உணர்ந்த உள்ளமொடு மறியறுத்து / அன்னை அயரும் முருகுநின் / பொன்நேர் பசலைக்கு உதவா மாறே (நற்.47) என்னும் நற்றிணை அடிகள் உணர்த்துகின்றன.

## குறிபார்க்கும் நம்பிக்கை

தலைமகளின் காம நோயை அறியமாட்டாத தாய் வேலனையோ, கட்டுவிச்சியையோ அழைத்துக் குறி கேட்பது வழக்கம். இது பற்றி சு. வித்தியானந்தன் குறிப்பிடுகையில், 'குறி பார்க்கும் வழக்கம் சங்க காலத்தில் மிகவும் பரவியிருந்ததென அறிகின்றோம். அகப்பொருள் இலக்கியத்தில்

இவ்வழக்கினைப் பரக்கக் காணலாம்' என்கின்றார். இதனை வெறியாட்டுத் தொடர்பான கவிதைகளில் காணலாம். (Vidhyananthan, 2014)

அகவன் மகளே அகவன் மகளே

மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்

அகவன் மகளே பாடுக பாட்டே

இன்னும் பாடுக பாட்டே அவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே (குறுந்.23)

இக்கவிதையில் குறிப்பிடப்படும் அகவன் மகள் என்பது வயது முதிர்ந்த பெண்ணையே குறிக்கும். தலைமகன் பிரிந்து சென்றமையால் தலைமகளின் நெற்றியில் பசலை பாய்கின்றது. அப்பசலைக் கண்டு தலைமகளின் அன்னை செம்முது பெண்டிராகிய கட்டுவிச்சினை அழைத்துக் குறி கேட்கின்றாள். அப்போது கட்டுவிச்சி வீட்டின்கண் நெல்லைப் பரப்பிக் கட்டுவைத்து, அக்கட்டுகளுக்கு எதிரே நம்மை நிறுத்திக் குறி கேட்பாள். அவ்வாறு கேட்கும்போது, அக்கட்டுக்குறி, மலையில் உள்ள முருகவேளினால் ஏற்பட்டது என்று கூறுமோ? என்று தோழி சிறைப்புறமாகத் தலைமகட்கு உரைப்பாளாய், வெறியின் இயல்பினைக் கூறி வரைவு கடாயினாள் என்று நற்றிணை கூறுவதிலிருந்து கட்டுவிச்சியிடம் குறி கேட்கும் நம்பிக்கை அன்றைய தொல்குடிச் சமூகத்தில் இருந்துள்ளது எனத் தெளியலாம். இதனை,

நல்நுதல் பரந்த பசலை கண்டு அன்னை

செம்முது பெண்டிரொடு நெல் முன் நிறீஇ

கட்டின் கேட்கும் ஆயின் வெற்பில்

.......... ....... ........ .........

........... ........ ........ இந்

நெடுவேள் அணங்கிற்று என்னுங்கொல் அதுவே (நற்.288) என்னும் அடிகளின் வழி அறியலாம். தலைமகளைப் பெற்றவர் முருகனால் நோய் ஏற்பட்டது என்று கருதினால் அங்கு வேலனை அழைத்து கழங்கு பார்க்கின்றனர். இதனையும் குறிஞ்சிக் கவிதைகளுள் காணலாம்.

பிரப்பரிசி, பலியிடல் பற்றிய நம்பிக்கை

தெய்வங்களுக்குப் படைக்கும் தானியங்களைப் பிரப்பரிசி என்பர். ஆட்டின் கழுத்தை அறுத்து, தினையை உடைய பிரப்பரிசியைப் பலியாக வைத்தும், பல்வகை இசைக்கருவிகள் முழங்க தெய்வத்தை வழிபட்டனர் குறிஞ்சி நில மக்கள். இவ்வாறு செய்தால் தெய்வம் காப்பாற்றும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இதனைக் குறுந்தொகை - 263 ஆம் கவிதையில் காணலாம்.

## விரிச்சி - நற்சொல்

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர்ப் பிறர் கூறும் சொற்களைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் பண்டு தொட்டு நம்மிடையே நிலவுகின்றது. இதனைப் பண்டைத்தமிழ் மக்கள் 'விரிச்சி' எனச் சுட்டியுள்ளனர் (Gandhi, 2003) தலைமகனைக் கருதியிருக்கும் அப்பொழுதில் நம் அயல் வீட்டுப் பெண் ஒருத்தி மற்றொருத்தியிடம் உரையாடும்போது நமக்கு நன்னித்தம் தோன்றுமாறு 'அவன் இப்பொழுதே வருவான்' என்று கூறினாள். அச்சொற்கள் கிடங்கில் என்னும் ஊர் போல இனிமை உடையனவாய் அமைந்தன என்கின்றாள் தோழி. இதில் 'வரூஉம்' என்னும் சொல்லே மிக முக்கியமானது. இச்சொல்லே நன்னிமித்தத்தின் அடையாளம். இதனை, அமுதம் உண்க நம்அயல் இலாட்டி / பெருமலை நாடனை வரூஉம் என்றோளே (நற்.65) என வரும் அடிகளில் காணலாம்.

அணங்கு, சூர் பற்றிய நம்பிக்கை

குறிஞ்சி நிலச் சமூகத்தில் அணங்கு, சூர் பற்றிய நம்பிக்கைகள் இருந்தன. மந்திரமும் ஆவியுலக நம்பிக்கையும் வரலாற்று முற்பட்ட காலத்தில் நிலவியதாக மானிடவியலார் கருதுவர். அணங்கு, சூர் என்ற இரண்டும் மலையில் உறைபவை. இதனை, அணங்குடை நெடுங்கோடு (அகம்.272), அணங்குடை சிலம்பு (அகம்.198), சூர்மலை (ஐங்.249) என்ற அடிகளில் காணலாம். “ஆவிகள் பற்றிய நம்பிக்கையின் அடிப்படையிலேயே அணங்கு என்ற தெய்வம் உருவாக்கப்பட்டுள்ளது” என்பார் ஆ.சிவசுப்பிரமணியன் (Sivasubaramaniyan, 2010).

பேய், பிசாசு பற்றிய நம்பிக்கை

பேய், பிசாசு பற்றிய நம்பிக்கை மக்களிடம் நீண்ட காலமாகவே உள்ளது. இயல்பாக இறக்காமல் இறந்தவர்களே பிசாசாக மாறுவர் என்னும் நம்பிக்கை குறிஞ்சி நில மக்களிடம் இருப்பதை, கைப்படுக்கப் பட்டாய் சிறுமி நீ மற்று யான் / ஏனைப் பிசாசு (கலித்.65) என்னும் அடிகள் உணர்த்துகின்றன. அகநானூற்றில் தலைமகள் தன் நெஞ்சிற்குக் கூறுகையில், பேயும் அறியா மறையமை புணர்ச்சி (அகம்.62) என்கின்றாள். இதில் பேய்கள் இரவுப்பொழுதில் உலவும் எனும் நம்பிக்கையைக் காணலாம்.

கட்டு, கழங்கு பற்றிய நம்பிக்கை

குறி சொல்வதற்குப் பயன்படுபவையே கட்டு, கழங்கு என்பவை. கட்டுப்பார்ப்பவரைக் கட்டுவிச்சி என்பர். இவரைச் சங்கக் கவிதைகள் 'முதுவாய்ப் பெண்டிர்' என்றழைக்கும். கட்டாவது முற்றத்தில் நெல்லைப் பரப்பி, தெய்வத்தைப் பாடி, எண்ணிப் பார்த்துக் கட்டுவிச்சி காணும் குறியாகும். இது பற்றிய நம்பிக்கையை, ......... ....... ....... முதுவாய்ப் / பொய்வல் பெண்டிர் பிரப்பு உளர்பு இரீஇ (அகம்.98) என்ற அடியின் மூலம் அறியலாம். இதனை வயது முதிர்ந்த பெண்டிர் செய்கின்றனர். ஆனால், கழங்கு பார்த்தலை வேலனே செய்கின்றான். இவன் கழங்குகளைக் கீழே பரப்பி எண்ணி ஒற்றையாயின் இன்னது என்றும் இரட்டையாயின் இன்னது என்றும் துணிந்து கூறுவான். இந்நிகழ்வின் இறுதியில் பொன்னாலாகிய பொற்றகட்டில் தெய்வ உருவத்தைக் கீறுவதால் முடிவடைகின்றது. இதனைக் கழங்கு மெய்ப்படுத்து கன்னம் தூக்கி (ஐங்.245) என்ற அடி உறுதி செய்யும்.

## முடிவுரை

இனவரைவியல் அடிப்படையில் சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகளை நோக்கும்போது பின்வரும் முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவை வருமாறு: -

மலையும் மலை சார்ந்த பகுதியுமான குறிஞ்சித்திணையில் வாழும் கானக்குறவர்கள் கிழங்கு, வாழை, கள், ஐவனம், தினை, மாவடு, தேன், இறைச்சி முதலிய உணவுகளை உண்டுள்ளனர். தொடக்ககாலத்தில் இவர்கள் தமக்கான உணவைத்தேடி, அலைந்து திரிந்து, அதன்பிறகே தமக்கான உணவைப் பெற்றுக் கொண்டனர். ஆனால், அவர்கள் நாகரிக வளர்ச்சியால், தமக்கான உணவைத் தமக்கு அருகில் இருந்த புனங்களைப் பண்படுத்தி, அங்குத் தினை விவாசயத்தை மேற்கொண்டு, ஓரிடத்தில் நிலையாக வாழும் நிலைக்கு முன்னேறியுள்ளனர் என்பதைச் சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகள்வழி அறிந்துகொள்ள நேர்கின்றது. மேலும், தொழில் அடிப்படையிலும் நில அடிப்படையிலும் இயற்கையில் கிடைக்கும் காய்களையும் கனிகளையும் கிழங்குகளையும் மலையிலுள்ள தேனையும் உண்டுள்ளனர். இம்மக்களின் விளைநிலங்கள் புனம், முதை, துடைவை என்றழைக்கப்பட்டன. மகளிர் தமது அங்கங்களை மறைக்க தழையாடையையும் ஆடவர் தமது இடுப்பில் கச்சு என்ற ஆடையையும் அணிந்திருந்தனர். மேலும், ஆடவர் தம் காலில் வீரக்கழல் அணிந்திருந்தனர். இஃது வீரத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது. குறிஞ்சி நில மகளிர் அணிந்திருந்த தழையாடை அவர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வைக் காட்டுகின்றது.

குறிஞ்சி நிலப் பெண்கள் வளை, மோசை, மகரவாய், வகிர் ஆகிய அணிகலன்களையும் அவர்தம் ஆண் குழந்தைகள் ஐம்படைத்தாலி, புலிப்பல் தாலி ஆகியவற்றையும் அணிந்திருந்தனர். குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுவதற்கு ஏற்றாற் போன்றுள்ள வாள், கவண், பகழி, வில் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். வட்டுச்சாடி, உரல், உலக்கை, கிண்ணம் முதலிய கருவிகளை உபயோகித்துள்ளனர்.

குறிஞ்சி நில மக்கள் தினைத்தாளால் வேயப்பட்ட சிறுகுடில்களில் வாழ்ந்திருந்தனர். அவர்கள் கிழங்கு அகழ்தல், தேன் எடுத்தல், பலா மரங்களை வளர்த்தல், வேட்டையாடுதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். குறிஞ்சித்திணையின் பொருளாதார நிலைமை மலையின் இயற்கை வளத்தையும் புன்செய் வேளாண்மையையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

வேலன் வெறியாட்டில் இடம்பெறும் கள அமைப்பு, அவன் ஆட்டுக்குட்டியைப் பலியிடுதல் ஆகியவை முருகனைத் திணைக்குடி தெய்வமாகச் சித்திரிக்கின்றன. ஆரியர்களின் செல்வாக்கால் முருகன் - ஸ்கந்தன் - கார்த்திகேயன் இணைப்பு உருவாகி, முருகன் பிற்காலத்தில் சமஸ்கிருதவயமாக்கப்பட்ட தெய்வமாக மாறிவிடுகின்றான். இவ்வழிபாட்டில் நிகழ்ந்தப்பெறும் சடங்குகள் குறவர்களின் கூட்டு வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன. குறிஞ்சி நில மக்கள் அணங்கு, சூர், பேய் ஆகியவற்றைக் கண்டு அஞ்சினர். ஆனால், அவற்றை வழிபடவில்லை. பயங்கலந்த நம்பிக்கையே அவர்களிடம் இருந்துள்ளது. குறிஞ்சி நில மக்களிடையே மழைச்சடங்கு, வளச்சடங்கு, வெறியாட்டுச் சடங்கு ஆகியவை வழக்கில் இருந்துள்ளன. இச்சடங்குகள் முறையே மழைக்காவும் வளத்திற்காகவும் நோய் நீங்குவதற்காகவும் நிகழ்த்தப்பட்டுள்ளன. கண் துடித்தல், நோய் நீங்க இறைவனுக்குப் படையல் போடுதல், குறி பார்த்தல், வளை செறிதல், பலியிடுதல், விரிச்சி கேட்டல் முதலிய நம்பிக்கைகள் குறிஞ்சி நில மக்களிடையே இருந்துள்ளன.

மேற்கூறிய தரவுகளின் அடிப்படையில் நின்று நோக்குகையில், மலையில் வாழ்ந்த மக்கள் மிகவும் புராதான நிலையில் இனக்குழுவாகவே வாழ்ந்துள்ளனர் என்பதையும் தங்களுக்கென்று தனித்த அடையாளத்தையும் பண்பாட்டையும் கொண்டிருந்தனர் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

## References

Bagthavatchala Bharathi, (2005) Manidaviyal Kotpadugal, Valinam, Puthuvai, India.

Bagthavatchala Bharathi, (2009) Panpattu Manidaviyal (Forth Edition), Meiyappan Publication, Chidambaram, India.

Balasubramanian, K.V., (2007) Nattrinai (source and text), New Century Book House (P) Ltd, Chennai, India.

Dhaksinamorthi, A., (2007) Ainkurunuru (Source and Text), Vol. 1, New Century Book House (P) Ltd, Chennai, India

Dhananjayan, A., (2015) Tamilil Ilakkiya Manidaviyal, International Institute of Tamil Studies, Chennai, India

Dhananjayan, A., (2015) Vilimpunilai Makkal Valakkarugal (Inavaraiviyal Aaivu), NCBH, Chennai, India

Gandhi, K., (2003) Tamilar Palakkavalakkankalum Nampikkaikalum (Second Edition), International Institute of Tamil Studies, Chennai, India

Jeyapal, R. (Urai), (2007) Akananuru (mūlamum uraiyum), Vol. 1& 2, NCBH, Chennai, India

John Monagan - Beter Jast, (2005) Samuga - Panpattu Manidaviyal, Adaiyalam, Chennai, India

Mathaiyan, P., (2010) Sanga Ilakkiyathil Kudumpam, NCBH, Chennai, India

Pandurankan, A., (2016) Sanga Ilakkiyam (Samayam, Valipatu, Arasu, Samugam), NCBH, Chennai, India

Raj Gowdhaman, (2006) Pattum Thogaium Tholkappiyamum Tamil Samuga Uruvakkamum, Thamilini, Chennai, India

Sakthivel, S., (2010) Nattupuraviyal Aaivu (Tenth Edition), Manivasagar Publication, Chennai, India

Saminathaiyar, U.Ve., (2009) Kurunthogai, Dr. U. Ve.SA. Library, Chennai, India

Sivasubramaniyan, A., (2010) Mandhiramum Sadangukalum, Kalasuvadu Publication, Chennai, India

Subramaniyam, K., (2011) Sangakala Samuthayam (Forth Edition, NCBH, Chennai, India

Thaninayaga Adikalar, (2014) Nila Amaippum Tamil Kavithaium, Tamil Translation: K. Puranachandhiran, NCBH, Chennai, India

Vidyananthan, S., (2014) Tamilar Salpu, Kumaran Publication, Kolumpu - Chennai, India

Viswanathan, A., (2007) Kalithogai (source and text), New Century Book House (P) Ltd, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License